செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி௵ (1889) ஆவணி ௴ 28௳, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது௵ புரட்டாதி௴ அஉ வெள்ளிக்கிழமை (24 9-1971) [இல-உச

# கல்விப்பேற்றினை ஈந்தருளும்

## தாயைப் பணிவோம்

சைவமக்கள் சிவபெருமானுடைய சத்தியாகிய உமாதேவியாரை நவராத்திரி காலத்தில் முதல் மூன்று நாட்களிலும் துர்க்கையாகவும், அடுத்த மூன்று நாட்களிலும் இலக்குமியாகவும், கடைசி மூன்று நாட்களிலும் சரஸ்வதியாகவும் வழிபடுவர்.



சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தையுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே

இச்செய்யுளில் குமரகுருபரசுவாமிகள் சரசுவதி தேவியைத் துதிக்கின்றனர்.

நாவன்மையும் ஒரே சமயத்திற் பல விஷயங்களைக் கவனிக்குமாற்றலையும் மாணாக்கர்களுக்குப் பாடம் சொல்லும் ஆற்றலையும் தமக்கு ஈந்தருளும்வண்ணம் சகலகலாவல்லியிடம் கேட்கின்றனர்.

இலக்குமி ஈந்தருளும் செல்வப்பொருள் அழியுந் தன்மையுடையது. சகலகலாவல்லி ஈந்தருளும் கல்விச் செல்வம் அழியாதது.

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து"

## ஆலயத்தில்- உயிர்க்கொலை ஒழியாதா?

சமயத்துறையிலே அறிவு முதிர்ச்சியினால் பல் வேறு மாற்றங்களையும் இப்போது காண்கின்றோம். மனித உள்ளம் பண்படைந்து தூய்மையான வழியிலே செல்ல முற்படுகின்றது. பண்டையமூடக்கொள்கைகள் யாவும் அறிஞர்களின் தலையீட்டினால் அகலுகின்றன. ஆலய வழிபாட்டு முறைகளிலும் அதிக நாகரீகமான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. மனம் ஒரு நெறிப்பட்டு, பண்படைய வேண்டும் என்பதற்காகவே ஆலயம் செல்கின்றனர் மக்கள்.

ஆயின், சில இடங்களிலே இன்று கூடப் பண்டைய மூடக்கொள்கைகளும், அநாகரிகமான முறைகளும் காணப்படுகின்றன. 'எல்லா உயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயன்றி, வேறொன்றறியேன் பராபரமே'' என்ற மூதறிஞர் காட்டிய வழியிலே செல்லுகின்றோம் எனக் கூறி உயிர்களுக்குத் துன்பத்தையே விளைவிக்கின்றனர்.

அன்பும், அருளும், கருணையும், இன்பமும் பெறப் போகின்ற இடம் ஆலயம். அங்கு வன்பும், மறமும், கொலையும், கொடூரமும் நிகழ்த்த இடம் உண்டா? கொலை செய்வது பாவமென்பதொருபுறமிருக்க இது பரிதாபத்தை ஏற்படுத்தவில்லையா? ஆலயத்தைக் கொலைக் களமாக்கியும், இறைச்சிக் கடையாக்கியும் விடுகின்றனரே சிலர்,

நல்ல நாள் பெரிய நாள் என்றும், நல்லூரான் திருவிழா வென்றும் தூய்மையாக வாழ்பவரே கோயிற் பலியாட்டிறைச்சியையும் உண்கின்றனர். பிந்தியது செய்ய எவ்வாறு அவர்மனம் ஒருப்பட்டதோ? அன்பும் பகுத்தறிவும் அவர்களை இடித்து நல்வழிப் படுத்தவில்லையே?

இலங்கையில் பௌத்த சமயத்தவர்களுக்காகப் 'போயா' தினம் விடுதலையாக்கப்பட்டுள்ளது. அன்று நாட்டில் உள்ள இறைச்சிக் கடைகளும், தவறணைகளும் மூடப்படவேண்டும் என்று சட்டம் ஆக்கி உள்ளனர். இறைச்சிக் கடைகளையே புனித தினத்தன்று மூடும்படி கூற அச்சமய மக்கள் பண்படைந்துள்ளனர். நம் மக்கள் ஆலயத்திலே — புனித இடங்களுள் தலையான இடத்திலே — இறைச்சிக் கடையையும் கொலைக்களத்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ

## "பணி புரி— பலனை எதிர்பாராதே!"

அராலி-கிழக்கு வாலையம்மன்கோவிலில் ஆண்டுதோறும் விஜயதசமியிலன்று உயிர்ப் பலியிடும் வழக்கம் இருந்து வருவதாக அறிந்து மனம் மிக வேதனைப்பட்டோம். சைவ சமய அன்பர்களும், அறிவுடையோரும் சேர்ந்து இந்த மாபாதகச் செயலை ஒழித்திடப் பாடுபடவேண்டும். இது பெரும் சைவத் தொண்டாகும். இந்தப் பலி நிறுத்த முயற்சியில் ஈடுபட்டுழைக்க முன்வந்த எல்லோரையும் பாராட்டுகின்றோம். "பணி செய் - பலனை எதிர் பாராதே!" என்பதை உள்ளத்திருத்தி, தெய்வப் பணியை மன நிறைவுடன்செய்திடுக என வாழ்த்துகிறோம்.

ஸ்ரீமத். தம்பிரான் சுவாமிகள்
நல்லை ஆதீனம், 15-9-71.

## உயிர்க் கொலை செய்யாதீர்!

### அராலியூர் அன்பர்களே! சிந்தியுங்கள்!

கடவுள் அன்பு வடிவானவன். அவனால் படைக்கப்பட்ட எவ்வுயிரும் வாழ வேண்டுமென்பதே உண்மை. எவ்வுயிரும் வாழ நாமும் வாழ்தலே உயிர் விடுதலைபெற நாம் செய்யும் பணியாகும்.

"எவ்வுயிரும் இன்புற்றிருக்க
நினைப்பதுவே யல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே"

என தாயுமானவர் சொல்வதைச் சைவ நன்மக்கள் உணர்ந்து எங்கும் சிவமாய் விளங்கும் அன்பின் வடிவான கடவுளின் கோயிலில் பலியிடுதலை விலக்குங்கள். வாலையம்மனும் சிவ சக்தியின் வடிவமே என்ற உண்மையை உணர்ந்து செயற்படுவீர்களென நம்புகிறேன். முன்பு பலியிட்ட எல்லாக் கோயில்களிலும் பலியிடல் விலக்கப்பட்டும் வட்டுக்கோட்டைத்தொகுதியில் - அராலி கிழக்கு வாலையம்மன் கோயிலில் பலியிடுவது தீமையல்லவா? அனைவருக்கும் பழியல்லவா?

பகுத்தறிவு பெற்ற மக்களே! அறிவினால் பயன் பெறுவதை எவராவது வேண்டாமென்பீர்களா? பிற உயிரடையும் துன்பம் நாம் அடையும் துன்பமே என்பதனை உணர்வதே அறிவினாலடையும் பயன். அதனை நினைந்து சைவத்தின் மேன்மையை உலகமே உணர வைத்திட உயிர்க்கொலை செய்திட மாட்டீர்களென நம்புகிறேன்.. 17- -71 இந்து சாதன இதழில் "எத்தனை ஆண்டுகள் இரந்து கேட்டோம் — செவி சாய்ப்பாரில்லையே...!" என அன்பர் கா. இரகுநாதன் கவலையுடன் விடுத்த வேண்டுகோள் கண்டேன்; குறித்த கடிதரது நோக்கம் தூய்மையானது; சைவ நன்மக்களின் சிந்தனைக்குரியது; 'செயற்கரிய செய்வர் பெரியார்'. இனிப் பழி செய்திடார் என்று நம்புகிறேன்.

புலவர் த. வடிவேலன்,
யாழ்ப்பாணம், 20-9-71.

### பெரியபுராணப் படிப்புப் பூர்த்தி விழா

சுதுமலை சிவன் கோயிலில் நிகழ்ந்து வந்த பெரிய புராணப் படிப்பு பூர்த்தியாவதை முன்னிட்டு எதிரே வரும் (1-10-71) வெள்ளிக்கிழமை பகல் சங்காபிஷேகமும் அன்று மாலை 5 00 மணியளவில, விசுவநாதர் விசாலாட்சி சமேதராக மானிப்பாய் மருதடி விநாயகர்ஆலயக்கேணிக்கரையில் வைத்து வெள்ளானைச்சருக்கம் முதலை வாய்ப் பிள்ளையை மீட்டல் ஆகியபாடல்கள் பாடப்பெறும். 2-10-71 பகல் அன்னதானம் நிகழும்:

—0—

## பலி நிறுத்தும்

### ஆலோசனைக் கூட்டம்

நல்லை, ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் ஸ்வாமிகளது தலைமையில், அராலி கிழக்கு, வாலையம்மன் ஆலயத்தில், விஜயதசமித் தினத்தில் ஆண்டுதோறும் நிகழ்ந்து வரும் உயிர்ப் பலி (படுகொலை) நிறுத்தம்பற்றி அன்புப் பிரசாரம் செய்யும் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று மாலை (24-9-71) 6-30 மணியளவில் நிகழவிருக்கிறது, இக்கூட்டத்தில் உயிர்ப்பலி நிறுத்தம்பற்றி பிரசாரம் செய்யும் தீர்மானம்நிறைவுசெய்யப்பெறும்

## நவராத்திரி விழா

### அர்ச்சகர் சபை ஆதரவில்

அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபை ஆதரவில்கட்டுவன் அலவத்தைவீரபத்திரர் ஆலயத்தில் 20-ஆம் தேதி தொடக்கம் நவராத்திரி வழிபாடு சிறப்புற நடைபெற்றுவருகிறது. தினமும்விசேட அபிடேக ஆராதனைகளுடன் கூட்டுவழிபாடு சமயப்பிரசங்கங்கள் ஆதியன நிகழ்ந்துவருகின்றன. பத்தாம் நாள் விஜயதசமியன்று மானம்பூ உற்சவம் விசேட நிகழ்ச்சிகள்கொண்டதாக அமையும். ந. நி.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

# உலகத் தலைவர்களால் மதிக்கப்பெறுகின்ற பேரறிஞர்

**எங்கள் அறிவித்தல்**

விஜயதசமி திருநாளை முன்னிட்டு சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, இந்துசாதனக் காரியாலயம் என்பவற்றில் கருமமாற்றுவோருக்கு எதிர்வரும் 29-9-71 புதன்கிழமை விடுமுறைநாளாகும் என்பதை அன்பர்கட்குத் தெரிவிக்கின்றோம். -அதிபர்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம ரனாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஹூ புரட்டாதி மீ அ·உ வெள்ளிக்கிழமை [1971]

## நாவலர் நூல்களைக் கற்க வழிசெய்க.

அரசாங்கம் பள்ளிக்கூடங்களைத் தேசியமயமாக்க முன் பல பள்ளிக்கூடங்களில் ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானுடைய பாலபாடங்களையும் சமய நூல்களையும் கற்பித்து வந்தார்கள். வண்ணார்பண்ணை நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் அவருடைய பாடப் புத்தகங்களே கற்பிக்கப்பட்டு வந்தன இக்காலம் ஒரு பள்ளிக்கூடத்திலும் அவருடைய பாடப் புத்தகங்கள் கற்பிக்க இடமில்லை. பொதறிவு, ஒழுக்கம், கடவுள் வழிபாடு சம்பந்தமாக மாணவர்கள் சிறந்த கருத்துக்களைப் பெறுவதற்கு அந்நூல்களைவிடச் சிறந்த நூல்களில்லை. அத்தகைய நூல்களை நமது பிள்ளைகள் கற்பதற்கு இக்காலக் கல்வித் திட்டம் இடங் கொடுக்காது.

இக்குறையை நீக்குதற்கு ஊர்கடோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிள்ளைகளுக்கு அவருடைய பாடப் புத்தகங்களைக் கற்பிப்பதற்கு சைவாசிரியர்கள் முன்வருதல் பெரும் புண்ணியமாகும். சைவசமயாபிவிருத்திச் சபைகள், கிராம முன்னேற்றச் சபைகள் இவ்வியகத்தை ஆதரிப்பாராகில் நாட்டில் சைவமுந் தமிழுந்தழைத்தினிதோங்கும். நாவலர் பெருமானை நினைவுகூர்ந்து மக்கள் அவர் காட்டிய வழியில் ஒழுக இவ்வியக்கம் உறுதுணைபுரியும்.

சிங்கள நாட்டிலே பள்ளிக்கூடப்படிப்பு நடைபெறாத நாட்களில் அங்குள்ள பௌத்த சங்கங்களும், பிக்குமார்களும் புத்த தருமத்தை பள்ளிக்கூடமில்லாத நாட்களில் பிள்ளைகளுக்கு கற்பிக்கின்றார்கள். அவ்விதமாக நடைபெறும் வகுப்புக்களுக்கு அரசாங்கம் சன்மானம் வழங்குகின்றது. தமிழ்ப் பிள்ளைகளுக்காக முன்கூறப்பெற்ற முறையில் நடைபெறும் வகுப்புக்களுக்கு அரசாங்கத்தினுடைய உதவியையும் பெற்றுக்கொள்ளலாமெனவும் கருதுகின்றோம்.

## ஈழமணி, வட்டுக்கோட்டை - நாகலிங்கம்பிள்ளை

[துணையாசிரியர்]

[சைவபரிபாலன சபைத் தலைவர் சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் அவர்களது மறைவைப்பற்றி சென்னை, "சித்தாந்தம்" வெளியிட்ட அநுதாபச் செய்தி]

நம் சமாஜ 48 ஆம் ஆண்டு விழா சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையில் 1953 டிசம்பரில் நிகழ்ந்த போது சைவ மகாநாட்டுக்குத் தலைமை வகித்த ஈழத்தைச் சேர்ந்த சைவப்பெரியார், வட்டுக்கோட்டை திரு. வே. நாகலிங்கம்பிள்ளை அவர்கள் 1-8-71 ஞாயிற்றுக்கிழமையன்று இவ்வுலகைவிட்டு மறைந்த செய்திகேட்டு சமாஜம் வருந்துகின்றது.

அப்பெரியார் நம் சமாஜத்தோடு நெருங்கிய தொடர்புடையவர் ஆவர். திருமுறைகளிடத்தும் சைவசித்தாந்த சாத்திரங்களிடத்தும் தோய்ந்த ஈடுபாடு கொண்டவர் சைவப்பெரியார் திருவிளங்கம் அவர்களின் மாணவர்களுள் ஒருவராயிருந்து சைவசித்தாந்த சாத்திரங்களைப் படிக்கும்பேறு பெற்றவர். எனில் அதற்குமேல் இப்பெரியாரைப் பற்றிக் கூறவும வேண்டுமா! நம் சமாஜ மகாநாடுகள் ஈழநாட்டில் அவ்வப்போது நிகழக்காரணராயிருந்ததோடு அம மாகாநாடுகளிலெல்லாம் கூடவேயிருந்து அவற்றை வெற்றியுறச் சிறப்பிக்கும் தன்மை வாய்ந்தவர். வழக்கறிஞராயிருந்து தம் கடமையைச் செவ்வனேயாற்றிய பெரியார். இவர் திருமுறைகளை ஓதும் போது கன்னெஞ்சமும் கரைந்துருகும்.

இவர் 1958-ல் தாம் தலைமை வகித்த சைவ மகாநாட்டில் இறைவணக்கமாக ஒரு திருவாசகச் செய்யுள் பாடும் போது அருகிலிருந்த பெரியார்கள் எல்லோரும் அப்பாடலின் பொருளில தம் மனத்தைப் பறிகொடுத்தவராய் அதை இன்னொருமுறை பாடுமபடி கேட்டின்புற்றது இப்போதும் என் அகக்கண்முன் காட்சி தருகின்றது.

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து"

என்னும் வாதவூரடிகளின் வாக்கு இப்பெரியாருக்கு முற்றிலும் பொருந்தும். இவரையிழந்து வருந்தும் குடும்பத்தினருக்கும் சமாஜத்தாரின் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆறுதலும் கூறுகின்றோம். அப்பெரியாரின் ஆன்மா இறைவனின்னருளில் கலந்து அவன் அருள் வாரிதியில் திளைக்குமாக. அதற்கு ஆடியபாதத்தின் அருளை வாரிவழங்க அவனின்னருளையே வணங்குகின்றோம்

## உத்தமர் ராஜாஜி அவர்கள்



சிறந்த ஞானியும் தீர்க்கதரிசியுமான மதிப்பிற்குரிய உத்தமர் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் பாரத மக்கள் ஈட்டிய தவத்தின் பயனுகத்தோன்றியவர். 10 - 12 - 1970 இல் அவருடைய 93ஆவது பிறந்த நாள் கொண்டாடப் பெற்றது. 10-12-1971 இல் 94 ஆவது பிறந்த நாள் கொண்டாடப்படும்.

அறிவுடையா ரெல்லா
முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்

அறிவுடையார் பிறிதொன்றுமிலராயினும் எல்லாமுடையராவர். அறிவில்லாதார் எல்லாமுடையவராயினும் ஒன்றுமிலராவர். ஸ்ரீ ராஜாஜி அவர்களுடைய செல்வம் அறிவாகும் அவர் அதனை மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வகையில உபயோகிக்கின்றனர் பின்வருங் காரியங்களை முன்னரே தெரிவிக்கின்ற ஆற்றல் படைத்தவர். அங்ஙனம் தெரிவிக்கின்ற காலங்களில் அவரைக் குறைகூறவும் முன்வருவர். தருமநெறியில் ஆட்சி நடைபெற வேண்டுமென்ற கருத்துடையவர். உலகம் கலக்கம் அடைந்திருக்கின்ற இக்காலத்தில் அம்மகானுடைய உபதேசங்கள் மக்களுக்கு பெரும் ஔடதம்.

பலன்கருதாது சேவை செய்யும் தலைவர்களைக் காண்பதரிது. பட்டம் பதவிக்காகப் பணிபுரிபவர்கள் அனேகர். ஆகையினுல்தான் உலகில் இவ்வளவு சஞ்சலம். அவருடைய உடற்பலம் குறைந்தபொழுதிலும் உளப்பலம் குறையவில்லை. அவருடைய வயதில் அரைப் பாகமுடையவர் செய்ய முடியாத கடமைகளை அவர்தம் முதிர்ந்த வயதில் ஆற்றி வருகின்றனர். மக்களுடைய நன்மைக்காக அவர் தம் கருத்துக்களை 'சுவராஜ்ஜிய' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரஞ் செய்து வருகின்றனர்.

அவருடைய 94 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஒரு மலர் 10-1.-71 இல் வெளியிடப்பெறும். அதில் அவருடைய வாழ்க்கைசம்பந்தமான முக்கிய நிகழ்ச்சிகள் அழகான படங்களுடன் வெளிவருமென அறிகின்றோம். பெரியார் பல்லாண்டு வாழ்வாராக. ——

**வைரவர் கோயிலில் பஜனை**

வட்டு மேற்கு வட்டுக்கோட்டை ஸ்ரீஞானவைரவப் பெருமான் ஆலயத்தில் நவராத்திரிபூசைவழிபாடு சிறப்புற நடைபெறுகின்றது. 27-ஆம தேதி நல்லூர் பஜனைச் சபையார் இந்துபஜனை நடத்துவர்.

உ

### அராலியூர் அம்பாள் ஆலயத்தில் உயிர்ப்பலி நிறுத்தம்பற்றி நல்லை ஆதீனத்தலைவர் விடுத்தசெய்திக்கு நாடெங்கும் பெரும் பாராட்டு.

பணிபுரி என்றும் பலியையெதிர் பாராத்
துணிவைத் துணைக்கொண்டித் தூய — மணிமொழி
நல்லை ஆதீனத்து நாதனும் சந்நிதானம்
சொல்லுநெறி. ஓர்ந்தாற் சுகம்

— க.ம. சிவப்பிரகாசம் (ஆங்கில இந்துசாதன ஆசிரியர்)

## ஆலயத்தில் உயிர்க் கொலை ஒழியாதா?

(1-ம் பக்கத்தின் வளர்ச்சி)

தையும் உண்டாக்குகின்றனரே! ஐயோ! இவர்கள் உணரமாட்டாதவர்களா?

வாய்பேசாச் சீவன்களைக் கொன்று உண்ணும் வழக்கம் ஆலயத்தில் இன்னும் வேண்டுமா? பண்டை நாளிலே நரபலியிடுகின்ற வழக்கமும் இருந்ததே! அதனை அநாகரிகம் என்று ஒதுக்கவில்லையா? மீண்டும் அதனைச் செய்ய முற்படலாமா? அது போலவே இன்று சிற்சில இடங்களில் கோவில்களில் நடைபெறும் மிருகபலி நிறுத்தப்படவேண்டும,

நாகரிகமற்ற, பண்பாடற்ற, அன்பில்லாத, கொலைச் செயல் புரியும் நிலை மாற வேண்டும். அன்பும், பண்பும் உயர்ந்து நாகரிக உலகில் நடமாடும் மக்கள் திருந்தவேண்டும். பெரியார்களும், கற்றாரும், சமய நிறுவனங்களும் இவர்களைத் திருத்த வேண்டும.

சாதிக் குறைபாட்டொழிப்புச் சட்டம்மூலம் ஆலயப் பிரவேசத்தை நடாத்தும இக்காலத்தில் அரசியல் வல்லோரும் ஏனையோரும் ஆலயத்தில் பலியிடும் படுபாதகச் செயலைத் தடை செய்ய முற்படவேண்டும். வேண்டுமாயின் சட்டமூலமே தடை செய்ய நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். அதற்கு நம் தலைவர்கள் முன்னின்றுழைக்க வேண்டும். மேடைகளில் பண்பாட்டையும், நாகரிகத்தையும், சமத்துவத்தையும் பேசிக் கொண்டிருக்காமல் செயலிலே - நடைமுறையிலே கைக்கொள்ள வேண்டும்.

எவ்வாற்றானும், யாவர் நோக்கினும ஆலயத்தில் பலியிடுவது படுபாதகச்செயல், சுத்த காட்டுமிராண்டித்தனம், பண்பாடடையா முறை என்று உரைப்பதில் உணர்வதில் தவறுர். எனவே இப்போதே அதனை ஒழிக்கப் பாடுபட அனைவரும முனைக. அராலி கிழக்கு, வாலையம்மன் கோவிலிலும் இவ் வழக்கம் ஒழிவதாக. "அனைத்துயிரும் எம்முயிர் போல அன்புசெய்து போற்றிடுக." வளர்க சிவநெறி.

சைவப் புலவர்
மு. திருஞானசம்பந்தன்
கோக்குவில், 22-9-71.

## குருநாகலில்

குருநாகல் சைவ மகாசபை ஆதரவில் மேற்படி சபை மண்டபத்தில் நவராத்திரி விழா சிறப்பாக நடைபெறுகிறது. தினமும் பக்திப்பாடல்கள், சொற்பொழிவுகள், இசை, நடன நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. 27ஆம் தேதி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர். பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள் நிகழ்ச்சிகளிற் கலந்துகொள்கின்றனர். இச்சபை இப்பகுதியிற் செய்து வரும் அரிய சேவை யாவரதும பாராட்டுக்குரியதாகும். (ந, நி



உ
சிவமயம்

# துக்க நிவாரண அஷ்டகம்

கண்ணொளியதனுல் கருணையே காட்டிக்

## கவலைகள் தீர்ப்பவளே!

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங்
கண்ட நல்கற்பகக் காமினியே
ஜெயஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி (1)

காணுறு மலரெனக் கதிரொளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தாணுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்; (ஜெய, ஜெய)

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே!
பொங்கரி யாருனில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எங்குலம் தழைத்திட எழிலவடிவுடனே
எழுந்த நல் துர்கைகளே; (ஜெய ஜெய)

தண தண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கண கண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்!
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்; (ஜெய ஜெய)

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்ச நல் பாணியளே!
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனை
கொடுத்த நல்குமரியளே!
சங்கடம் தீர்த்திடச் சமாது செய்தநற்
சக்தியெனும் மாயே! (ஜெய ஜெய)

எண்ணியபடி நீயருளிட வருவாய்
எங்குல தேவியளே!
பண்ணிய செயலின் பலனது நலமாய்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனுல் கருணையே
காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே! (ஜெ... ஜெ)

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே! சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய். (ஜெய ஜெய)

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாக்ஷி (8)

(நல்லை. ஞானசம்பந்தர் ஆதீன இலவச வெளியீட்டிலிருந்து)

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு. நெடுங்காடு, சயம்பு வீதி, அருணசலம் தம்பிப்பிள்ளை அவர்களிடம் 1970-ம் ஆண்டு ஜனவரி (தை மாதம் 8ம் திகதிக்கு முன் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடைவுகள் 1971-ம் ஆண்டு ஒக்ரோபர் (ஐப்பசி) மாதம் 16-ம் திகதி (16–10–71) சனிக்கிழமை முற பகல் ஒன்பதரை மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளரும்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

எம். 241 24—9—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 10001

1. அருணசலம் கதிரவேலு
கவிபுரம், —வழக்காளி

எதிராக

1 ஆறுமுகம் கதிரவேலுவும்
2 பெண் மாரிமுத்துவும்
3 சிறிண்ணர் கந்தசாமியும்
4 பெண் வல்லியாச்சியும்
எல்லோரும். சுவிபுரம்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10001-ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு ஐப்பசிமீ 25ம் திகதி (25—10—71) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3353-73ம் 27-5-68 தொடக்கம் 28-5-69 வரைக்கும் ரூபா 2170/-க்கு 8½ வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 290-02

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுளிபுரம் இறை 'கனுத்தோட்டம்' நி. பா. 3½ விடுகளும, பனைகளும் மேற்கெல்லையிலுள்ள கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் தூர்வை பாவிப்புரிமையுடன் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு மாணிக்கம் பெண் சின்னம்மாவின் ஆதனம், மேற்கு சுப்பர் பெண் மாணிக்கத்தின் ஆதனம். தெற்கு கோவிந்தர் இராமுவுக்கும் பங்காவிகளுக்குமுரிய ஆதனம், இவையடங்கலும் Regd E. 318/205

J. A. எட்வேட்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை, 21-9-71.
எம் 243-24-9

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 10328

1 நாகமுத்து கதிரவேலுவும் மனைவி. 2. மகாலெட்சுமி இருவரும், உரும்பிராய்
—வழக்காளிகள்

எதிராக

வல்லிபுரம் சுப்பிரமணியம்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
—எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் MB 10328-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1971-ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகைமீ 9-ம் திகதி (9–11–71) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 3410ம் 25—9—68 தொடக்கம் 18—2—69 வரைக்கும் ரூபாய் 2250க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 283 சதம் 35 இதில் கொடுபட்ட தொகை ரூபா 2250 கழிவாகும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்கும் பகுதயும் நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை "அலரி வளவும் தோப்பு வளவும்' பர. வி. இலா. 8 ஆனுல் 1964ம் ஆண்டு வைகாசி மாதம் 27ம் உ உததரவுபெற்ற உலாந்தா S. அம்பலவாணரால் 180 இலக்கத்தால் வரையப்பட்ட அளவு படத்தில் காணப்பட்ட பர. வி. இலா. 6 குளி 9 இவ்வாதனத்தில் சொரியலாய் மூன்றிலொரு பங்குக்குப் பதிலாகஎதிரி தெற்குப் பக்கமாக ஆட்சிப்படுத்தியதும் மேற்படி படத்தில் லொட் 3 எனக் காட்டப்பெற்றதுமான விந்தமாக்கப்பட்ட விலப்பரப்பு 2 குளிகள் 3ம் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு

எல்லைகள்: கிழக்கு - K. சிவசம்புவினுடையதும், S. செல்லையாவினுடையதும் ஆதனம், வடக்கு - மேல் குறிக்கப்பட்ட அளவு படத்தில் 'lot 2' என்னும் இலக்கத்தால் சுட்டிக்காட்டப்பட்ட செல்லமுத்து சின்னத்தம்பி உரிமையாளர்களின் ஆதனம். மேற்கு - நாவலடி ஒழுங்கை. தெற்கு - S. செல்லையாவின் ஆதனம். பதிவு இல: 307/229

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
கொமிஷனர் விலைமதிப்பாளர்.
107, பெரிய தெரு
யாழ்ப்பாணம. 20–9–71
எம்: 247-24-9

## Commission Sale

## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ இல: 9201

(Dead) கந்தையா மயில்வாகனம் அல்வாய்தெற்கு, —வழக்காளி
மயில்வாகனம் இராசேந்திரா அல்வாய் தெற்கு,
அவருக்காக (Substituted) —வழக்காளி

எதிராக

1. வடிவேலு சின்னத்துரை
2. பெண் செல்வரட்ணம் அல்வாய்வடக்கு, —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டாலெனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியுமிதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கு மாதனத்தை 1971 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ந் திகதி (27-10-71) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலி கோவிற்பற்று அல்வாய் மாப்பாண குறிச்சியிறை "காட்டுப்புலம்", 1950ம் ஆ. சித்திரை மீ 5ம் உ T. சுப்பிரமணியம் உலாந்தா மேஸ்தரால் 3154ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டபடி வி. பர. 24 குளி 13, 9/32 இதில 1ம் துண்டுக்கு வி. பர. 5 குளி 12, 22/32 பனைகளுமெல்லை கிழக்கு குறித்த படத்தில் 5ம் துண்டு வடக்கு வாரித்தம்பி வல்லிபுரமும் மறுபேருக்குமுரியவாதனம் மேற்கு கந்தன் பசுபதிக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு குறித்த படத்தில் 2ம் துண்டு, குறித்த படத்தில் 6 என்று அடையாளமிட்ட முகப்பு தெருவும்; இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும்

(மதிப்பிட்ட விலை ரூபா 5666-00)

தீர்வைத்தொகை: ரூபா 720-00
வட்டி ரூபா 500/-க்கு 8 வீதப்படி
18—6—66 தொடக்கம் 15—11—66 வரை
வட்டி ரூபா 16-11-66 தொடக்கம் இறுக்கும் வரைக்கும்
10—8—71 இல் கோட்டில் கட்டியதொகை ரூபா 500-00

"சந்நிதி வேல்"
பருத்தித்துறை,
17-9-71.

கா. முத்துக்குமாருஐயர்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
எம். 238. 24-9-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு: இலக்கம். M B 10862

இல: 20. ஐந்தாம் குறுக்குவீதி. மத்தேயூஸ் ஜேம்ஸ்—வழக்காளி

எதிராக

சங்கரப்பிள்ளை மனுவேல்பிள்ளை கைம்பெண் மார்கரெட் ராசம்மா தனக்காகவும் தனது காலஞ்சென்ற கணவன் சங்கரப்பிள்ளை மனுவேலவுயிலையின் ஆதனங்களுக்குத் தத்துவப்பிரதிநிதியாகவும். 130/1 பெரியதெரு, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10862-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30-ஆம் திகதி (30—10—71) சனிக்கிழமை முற் பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய்6192-50 ம் 4- 6 -69 தொடக்கம் 27-6-70 வரைக்கும் ரூபாய் 6000/-க்கு 15 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 444/37. இதில் ரூபாய் 2000/- கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கண்டிக்குளி கோவிற்பற்று கரையூரிறை "மங்கைப்பாகன் வளவு" பா நில. இலா 1ம் 5 குளி, கல்வீடு' குசினி, கிணறு, செய்பயிர் வான்பயிர்களுடன். இதற்கெல்லை கிழக்கு-தண்ணீர் வாய்க்கால் வடக்கு பெரிய ரோட்டு. மேற்கு-அந்தோனி முத்துவினுதனம். தெற்கு லாறன்ஸ்பிள்ளை கிறிஸ்டினு பிள்ளையினுதனமும், தண்ணீர் வாய்க்காலும், இதடங்கலும் சகல உரித்துகளும், அதனைச்சேர்ந் வகைகளுடன்.

14, டேவிற் வீதி
யாழ்ப்பாணம், 16-9-71,

அ. போ. எதிர்மனசிங்கி,
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்,
எம். 236 24-9-71

## நவராத்திரி விழா

### சைவமங்கையர் கழகம்

வெள்ளவத்தை சைவமங்கையர் கழகம் நவராத்திரி விழாவைச் சிறப்புற நடாத்திக் கொண்டு வருகின்றது 28-9-71 மஹாநவமியிலன்று சரஸ்வதி பூசையும், மறுநாள் விஜயதசமி அன்று காலை 8-30 மணிக்கு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சிறுவர்களுக்கு வித்தியாரம்பம் செய்து வைக்கப்பெறும்.

## ஸ்ரீ சாந்தானந்தா ஜீ அவர்கள்

சுவாமி சாந்தானந்தஜீ அவர்களுடைய சொற்பொழிவு. பஜனை ஆகிய நிகழ்ச்சிகள் நல்லை. திவ்விய ஜீவனசங்க மண்டபத்திலும் நாட்டின் பிறபாகங்களிலும்சிறப்பாக நடைபெற்றுவருகிறது சுவாமிகள் செல்லுமிடமெங்கும் அன்பர்களது கூட்டம் திரளுகின்றது.


வெளிவந்துவிட்டது!

ஈழத்தைச் சார்ந்தவரும்,
தற்போது லண்டன் மாநகரில்
ஆசிரியராகப் பணிபுரிபவருமான
சரித்திராசிரியர்

திரு. வை.
முத்துக்குமாரசுவாமி
அவர்களால்

தமிழ்ப் பேரறிஞர் C W.
தாமோதரம்பிள்ளை
அவர்களைப் பற்றி
ஆங்கிலத்தில் எழுதிய நூல்
விலை ரூபா 1-25

கிடைக்குமிடம்:
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

வெளிவந்துவிட்டது! உ

நவராத்திரி விரத காலத்தை முன்னிட்டு
தேவி உபாசகர்கள் பாராயணஞ் செய்யவேண்டிய

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த

## சகல கலாவல்லி மாலை

வித்துவான் ந. சுப்பையபிள்ளை பார்வையிட்ட
உரையுடன்

விலை சதம் 30 —0— தபாற் செலவு வேறு

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்
பதிப்பு விற்பனைக் கழகம்.

411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 6047

1. மயில்வாகனம் இராசையாவும்
2. மனைவி சின்னதங்கச்சி இருவருடைய விலாசம் வண்ணார் பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

எதிராக

1 முத்துக்குமாரு குழந்தைவேலு கதிரவேலுவும்
2 மனைவி சிவயோகம் இருவருடைய விலாசம் நாவலர் வீதி வண்ணார்பண்ணை கிழக்கு
3 மனேஜர் மேர்க்கன்டையல் வங்கி, 486, கோட்டை, கொழும்பு.
4 சுப்பிரமணியம் பொன்னம்பலம் காரைநகர் மேற்கு காரைநகர்.
5 நல்லதம்பி செல்வநாயகம், காரியதரிசி டிஸ்திறிக் கோட்டு யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6047-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னை விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஆண்டு கார்த்திகைமீ 3-ந்திகதி (3-11-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 21356-25ம் 19-9-63 தொடக்கம் 22-12-64 வரைக்கும் ரூபாய் 17000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 504-41

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணையில் வண்ணார்பண்ணை கிழக்கு கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை "மாவடி இலகடியும் சம்பு நாதன் தறையும்" வி. பர.3 குளி 16. 1/8ம் கல்வீடும் குசினியும் மற்றும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு செல்லம் துரையப்பாவின் ஆதனம், வடக்கு ரோட்டு மேற்கு முருகர் நாகலிங்கத்தின் ஆதனம் தெற்கு முருகன் இராமனுதியினுதனம் மேற்கெல்லைக் காணியின் மேற்கெல்லையில் இருக்கும் கிணற்றில் அரைவாசிப்பங்கும் கொத்தாரிஸ் எஸ், கே எபிரகாம் அவர்களால் 8103ம் இலக்கத்தில் 15-11-1915ல் எலிசபெத் நேசம்மாவின் பெயரில் எழுதப்பட்ட சீதன உறுதியோடு அணைக்கப்பட்டிருக்கும் படத்தில் 'A' துண்டாகக் காட்டப்பட்டிருக்கும 1. 3/8 குளி விசாலமுள்ள வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இக்காணி D 287/265ம் இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

14, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்,
17-9-71

அ. போ. எதிர்மனசிங்கி
கொமிஷனரும் விலமதிப்பாளரும்
எம். 233 24—7—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M, B. 11949

1, மாரிமுத்து கைம்பெண் முத்துப்பிள்ளை. மூளாய் —வழக்காளி

எதிராக

1. வேலன் செல்லையாவும் பெண்
2. தெய்வானையும், கருவன், சுழிபுரம்
3. சன்முகம் கைம்பெண் வள்ளி

காலஞ்சென்ற கண்ணப்பர் பொன்னியின் ஆதனத்துக்கு சட்டத்தின்படி உரிமையாளராக —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸதிறிக் கோட்டின் M B 11949 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1971ம் ஆ ஐப்பசி மீ 15-ந் திகதி (15-10-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3015/-ம் 21-8-70 தொடக்கம் 12—1—71 வரைக்கும் ரூபாய் 2000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 675-15

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுளிபுரம் இறை 'பெரியவிளான் சாமந்தன் கலட்டியும் வீரநாதணன் கலட்டியும் பெரியவளவும்' வி. பர. 2ம் பனைகளும் தெற்கெல்லையிலுள்ள கிணற்றில் நாலிலொரு (1/4) பங்கும் மேற்கெல்லையில் இக்காணிக்காக புதிதாக விடப்பட்ட 6 அடி ஒழுங்கையால் வழிவாய்க்கால் பாவிப்புரிமையுடன் எல்லை கிழக்கு இக் காணியில் விடப்பட்ட 9 அடி ஒழுங்கை. வடக்கு சின்னப்பொடி கந்தையாவுக்கும் பெண் அன்னலெட்சுமிக்குமுரிய ஆதனம், மேற்கு மேற்கூறப்பட்ட கிணற்றுக்கு போக்குவரத்துக்காக விடப்பட்ட ஒழுங்கை, தெற்கு முருகன் நடேசுவுக்கும் பெண் நல்லம்மாவுக்குமுரிய ஆதனம், இவையடங்கலும்.

2. ஷை இறை 'இறவோலை' வி பர. 1ம் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு புண்ணன் சின்னத்தம்பிக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம், வடக்கு கதிரவேலு சபாபதிக்குரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை, தெற்கு புண்ணன் சின்னத்தம்பிக்கும் பெண் சின்னம்மாவுக்குமுரிய ஆதனம். இவையடங்கலும் தெற்குப் பக்கத்தால் கிழக்குக் காணக்குப் போகும் நாலு மூழ ஒழுங்கையை நீக்கி.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை, 21—9—71.

J. A. எட்வேட்
கோமிஷனர் &. விலமதிப்பளார்
எம். 242 24—9—71

## யாழ். சிறைச்சாலையில் நவராத்திரி விழா

"மனித வாழ்வுக்கு அவசியம்வேண்டற்பாலது வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றுமேயாம் மனிதன் தன் கடமைகளைச் செவ்வனே புரிவதற்கு உடல் நலம் முக்கியமானது. ஆகவே இத்தகைய மூன்று பேறுகளையும் பெற்றுக்கொள்வதற்காக உலகின் அன்னையாக விளங்கும் பராசக்தியை வழிபடும் காலமே நவராத்திரியாகும் இந்த ஒன்பது நாட்களில் வீடுகளிலும், ஆலயங்களிலும் இராக்காலத்தில் விசேடவழிபாடு நடைபெறும். கொலுவைத்தும் வழிபடுவர். முதல் மூன்று நாட்களும் வீரம் வேண்டித் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று நாட்களும் செல்வம் வேண்டி மகா இலக்குமியையும் இறுதி மூன்றுநாளும் கல்வி வேண்டிச் சரஸ்வதி தேவியையும் வழிபாடு செய்வர். இக்காலத்தில் தேவிதோத்திரங்கள் அபிராமியந்தாதி என்பன பாராயணம் செய்தல் விரும்பத் தக்கது".

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்உள்ள சைவ சமயக்கைதிகளுக்கான விசேட வழிபாட்டின் சார்பாக 19-9-71 ஞாயிற்றுக்கிழமை'நவராத்திரிவழிபாடு' என்னும் பொருளில் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ——

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 11101

1. நாகமுத்து தம்பையா கைம்பெண் சின்னப்பிள்ளை ஏழாலை தற்போது கும்பிவான்
2. தம்பையா சதாசிவம், ஏழாலை தற்போது கும்பிவான் —வழக்காளி

எதிராக

சீனிவாசகம் நடராசா ஏழாலை கிழக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11101-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஆ கார்த்திகைமீ 9ம் திகதி (9—11—71) செவவாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3355-55ம். 8-9-69 தொடக்கம் 13-7-70 வரைக்கும் ரூபா 2000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 260-59 கோட்டுச் செலவாக ரூபா 150/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை 'தொகிகுடுவை' என்று அழைக்கப்படும் காணி வி. பர. 12 தெற்குப் பக்கத்து கிணற்றிலும் வேப்பமரத்திலும் பங்குண்டு. எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு சின்னத்தம்பி முருகேசு மனைவி இராசம்மாவின் ஆதனம். தெற்கு வேலுப்பிள்ளை இன்னட்டியாரும் மனைவி சுந்தரம், அடங்க ம.

இ. கனகரெத்தினம்,
கொமிஷனரும்விலமதிப்பாளரும்
கம். 35/2 கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்,
எம். 240 24—9—71

## Commission Sale

## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. 11066

1. சின்னத்தம்பி சின்னத்துரை, புலோலிதெற்கு —வழக்காளி

எதிராக

1. இறந்துபோன பெண் இரத்தினத்தின் சொத்துக்கு, தனக்கும் இறந்துபோன இரத்தினத்திற்குப் பதிலாகவும், துன்னாலை வடக்கிலுள்ள கார்த்திகேசு இளையதம்பி என்பவர் —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனங்களை 1971-ஆம் ஆ நவம்பர் மீ 3-ம் திகதி (3—11—71) புதன்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று

(1) துன்னாலை வீரசுந்தரமுதலிக் குறிச்சியிறை திளானை வி. பர. 24, 1/8 இதிலாட்சிப்படி ஒன்பதிலிரண்டு பங்குக்கு வி. பர. 7, குளி 10½ எல்லை கிழக்கு இரத்தினம் பெண் நாகப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு ஆள்வார் சின்னப்பாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு வல்லிபுரம் பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு வெள்ளவாய்க்கால், இதில் சொரியலாய் அரைப்பரப்பும், புளிகின்ற கலட்டியென்னுங் காணியில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 18733—ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்ட 1565ம் இலக்கப் படத்திற் காணும் கிணற்றையும் தூர்வைநிலம் குளி ஐந்தையும் வழிவாய்க்காலுக்காக விடப்பட்ட பதினொரு குளியையும் பாவிக்குமுரித்தும்,

(மதிப்பிட்ட விலை ரூபா 1250/-)

2. ஷை இறை புளிகின்ற கலட்டி வி. 42¾ இதற்குப் பின்னாற்காணும் படத்தின்படி வி. பர. 57 குளி 12 இதில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 18733ம் இலக்கப் பிரிவிடல் வழக்குக் கடைசித் தீர்வையுடன் அணைக்கப்பட்டதும் உலாந்தா யேஸ்தர் S ஏகாம்பரத்தால் 1926ம் ஆ ஆவணி மீ 20ம் திகதி 1565ம் இலக்கத்தில் சிந்தாரிக்கப்பட்டதுமாகிய படத்தில் 4 ஆம் நம்பர் துண்டுக்கு வி. பர. 4 குளி 10 இதில் கிழக்குப் புறம் வி பர (2) இரண்டு எல்லை கிழக்கு சிதம்பரி கிட்டிணபிள்ளைக்குரிய ஆதனம், வடக்கு கணபதிப்பிள்ளை கந்தையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், மேற்கு வேலப்பர் கணபதிப்பிள்ளைக்குமுரிய ஆதனம். தெற்கு வழிவாய்க்கால் நிலம். இது முழுவதிலும் சொரியலாய் அரைவாசியும் கிணற்றையும் தூர்வை நிலம் குளி ஐந்தையும் வழிவாய்க்காலுக்காக விடப்பட்ட பதினொரு குளியையும் பாவிக்குமுரித்தும் (மதிப்பிட்ட விலை ரூபா 2500/-)

| | |
|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபா 2352-50 |
| வட்டி ரூபா 1500/-க்கு 8 வீதப்படி 18-9-70 தொடக்கம் 28-5-71 வரை | 80-00 |
| | 2432-50 |
| வட்டி ரூபா 2432/-க்கு 5 வீதப்படி 28-5-71 தொடக்கம் 3-11-71வரை (விற்பனவுவரை) | 50-65 |
| மொத்தம் ரூபா | 2483-15 |

சிவலிங்கநிலையம்,
வி. மூ. ரோட்,
பருத்தித்துறை
18-9-71.

க. நல்லலிங்கம்
கோட்டுக் கொமிஷனர்
ஏல விற்பனையாளர் & விலமதிப்பாளர்.
எம். 239 24—9—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

வழ: இல. M, B. 8220

மானிப்பாய் வீரகத்தி இரத்தினம். —வழக்காளி

எதிராக

நவாலி. தற்போது, பாடசாலை செல்லப்பா தர்மகுலராசா ஆசிரியர், நெலுவாதோட்டம், பண்டாரவளை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 8220ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆ ஐப்பசி மீ 20-ம்திகதி (20-10-71) புதன்கிழமை முற்பகல் 10-30மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 5752-25 சதமும்; 8-6-66 தொடக்கம் 20—12—66 வரைக்கும் ரூபா 3500/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம்முற்றாக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 175/-ம் கட்டப்பட்டு மீதி செலவுப் பணம் கழிக்கப்பட்டுள்ளது,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம்மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை, 'சடுவில்வளவு' (Chaduvil Valavu) கெற்பரப்பு 13½ கல்வீடும் மற்றும் கட்டடங்களும் கிணறும் பயிர்களும் எல்லை கிழக்கு குலசேகரம் பிள்ளை கைம்பெண் அலங்காரத்துக்கும் குட்டித்தம்பி இரத்தினம் பெண் தையல்நாயகத்துக்குமுரிய ஆதனம், வடக்கு ஷை தையல்நாயகத்துக்கும் பங்காளருக்கும் சாமுவேல் சின்னப்பா பெண் அன்னம்மாவுக்குமுரிய ஆதனமும், ஒழுங்கை முகப்பும், காலஞ்சென்ற சரவணமுத்து சுப்பிரமணியத்தன் உரிமையாளரின் ஆதனமும, மேற்கு ஷை சுப்பிரமணியத்தின் உரிமையாளரின் ஆதனம், தெற்கு ஒழுங்கை, இதடங்கலும் சொரியலாக மூன்றில் இரண்டு (3/2) பங்கு.

செ. பாண்டித்துரை
மல்லாகம்.
18-9-71
கொமிஷனர், விலமதிப்பாளர்.
எம். 235 24—9—71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 24—9—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்